செ.வெ.எண்: 11 நாள்: 03.10.17

## பத்திரிக்கை செய்தி

### காப்பகங்களில் இல்லக்காப்பாளர் பணி: தகுதியானோர் விண்ணப்பிக்க அழைப்பு

தமிழக அரசின் சமூகநலத்துறை கட்டுப்பாட்டில் இயங்கும் அரசு சேவை இல்லம் / அரசு குழந்தைகள் காப்பகங்களில் காலியாக உள்ள இளநிலை இல்ல காப்பாளர் காலிப்பணியிடங்களுக்கு தகுதியானோர் விண்ணப்பிக்கலாம் என்று மாவட்ட நிர்வாகம் தெரிவித்துள்ளது.

தமிழகம் முழுவதும் பல்வேறு இடங்களில் மாவட்ட சமூகநலதுறை கட்டுப்பாட்டில் அரசு சேவை இல்லம் / அரசு குழந்தைகள் காப்பகங்கள் இயங்கி வருகின்றன. இவற்றில் காலியாக உள்ள இளநிலை இல்ல காப்பாளர் பணியிடங்களை நிரப்ப தமிழக அரசு முடிவு செய்துள்ளது. அதன்படி தாம்பரம், கடலூர், தஞ்சாவூர், சேலம், சிவகங்கை, திருநெல்வேலி மாவட்டங்களில் உள்ள சேவையில்லங்களில் பயின்ற முன்னாள் மாணவிகளிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

- முன்னாள் சேவையில்ல மாணவிகள் தகுதி அடிப்படையில் நிபந்தனைகளுக்கு உட்பட்டு பணியில் சேர்க்கப்படுவர்.
- விண்ணப்பதாரர்கள் அரசு சேவையில்லங்களில் தங்கி பயின்ற முன்னாள் மாணவிகளாக இருக்க வேண்டும். பள்ளி இறுதி வகுப்பில் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும். வேலைவாய்ப்பு அலுவலகத்தில் பதிவு செய்து, வேலைவாய்ப்பு அட்டையை கைவசம் வைத்திருக்கவேண்டும்
- விண்ணப்பதாரரின் வயது வரம்பு 25 முதல் 35 வயதிற்குள் இருக்க வேண்டும். ஆதரவற்றோர், விதவைகள், கணவனால் கைவிடப்பட்டவர்கள் எனில் 25 முதல் 40 வயதிற்கு உட்பட்டவராக இருக்க வேண்டும்.
- மேலும் விவரங்களுக்கு மாவட்ட சமூகநல அலுவலரை அணுகலாம்.

மாவட்ட சமூகநல அலுவலர்,
கடலூர்.

03/10/2017

வெளியீடு:- செ.ம.தொ.அ.
கடலூர்.